# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை – ஜுலை 2016

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

**பொதுவான மதிப்புரை**

இந்த வினாப்பத்திரத்திற்கு மாணவர்களின் விடையெழுதும் ஆற்றல் சாதாரண மட்டத்தில் உள்ளது. அனேக மாணவர்கள் விடையெழுத தொடங்க முன்னர் வினாக்களை நன்கு விளங்கிக்கொள்ளவில்லை. கடந்த கால வினாப்பத்திரங்களுக்கு விடையெழுதி பயிற்சி செய்தல் இதற்கு நல்ல தீர்வாகும் கற்கை நூலிலுள்ள பாடவிடயங்களை நன்கு வாசித்து விளங்கியிருப்பின் ஒரு சாதாரண மாணவனால் பல வினாக்களுக்கு சரியாக விடையளித்திருக்க முடியும்.

### பிரிவு A

நான்கு (04) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 01** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவில் தொழில்சார் கணக்காளருக்கான நன்நெறிக் கோவையில் குறிப்பிட்டபடி ஒருமைப்பாடு (Integrity) கோட்பாட்டை விபரிக்குமாறும், கணக்காய்வாளர் மேற்கொள்ளும் உறுதிப்படுத்தல் ஈடுபாட்டு வகைகள் இரண்டினை கூறும்படியும் கேட்கப்பட்டது.

இது நேரடியாக விடையளிக்கக்கூடிய இலகுவான வினாவாகும். எனினும், அகே மாணவர்கள் சரியான விடையை எழுதாது “தொழில்சார் கணக்கறிஞர்கள் மோசடியான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது, அவர்கள் பக்கச்சார்பாக நடந்துகொள்ளக் கூடாது, நிறுவனத் தகவல்களை மூன்றாம் தரப்பினருக்கு வழங்கக்கூடாது என்பன போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியுள்ளனர். இன்னும் பல மாணவர்கள் தொழில்சார்கணக்காளர் நேர்மையானவராக இருக்கவேண்டுமென எழுதியுள்ளனர். எனினும் கணிசமான மாணவர்கள் சரியாக விடை எழுதியுள்ளனர்.

உறுதிப்படுத்தல் ஈடுபாட்டு வகைகளை எழுதுவதற்குப் பதிலாக, கணிசமான மாணவர்கள் கணக்காய்வு அபிப்பிராய வகைகள் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

இந்த வினாவுக்கான விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

**வினா இல. 02** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

பகுதி (A) : இந்தப் பகுதியில் “முகவராண்மை முரண்பாடு” என்றால் என்ன என்பதனை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சில மாணவர்கள் இதனை கணக்காய்வாளருக்கும் முகாமைக்கும் இடையிலான முரண்பாடு என தவறாக கருதி, கம்பனியின் கட்டுப்பாட்டை அடைவதற்கு முகாமையின் அந்தரிப்பு போன்ற விடைகளை எழுதியுள்ளனர்.

பகுதி (B) : இந்தப் பகுதியில், சிறந்த நடைமுறைக் கோவையில் கூட்டிணைவு ஆளுமை தொடர்பாக கோடிட்டுக்காட்டப்பட்ட பணிப்பாளர் சபைக்கான இரு வழிகாட்டல்களை கூறுமாறு கேட்கப்பட்டது. இந்த வினாவுக்கு அனேக மாணவர்கள் “முறையான அகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல், உரிய காலத்தில் கணக்குகளை தயாரித்தல் போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

இந்த வினாவுக்கான விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

**வினா இல. 03** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

பகுதி (A) : கணக்காய்வு நிறுவனமொன்றில் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூன்று மூலகங்களை கூறுமாறு கேட்கப்பட்டது. சில மாணவர்கள் வழிகாட்டல், மேற்பார்வை, மீளாய்வு போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

Part (B) : இந்த வினாவில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் இருப்பினை அறுதியீடு செய்வதற்கு கணக்காய்வு விதிமுறையினை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. இந்த வினாவுக்கும் தேய்மானத்தை மீளக் கணித்தல், நிபுணரின் சேவையை பயன்படுத்தல் போன்ற தொடர்பற்ற விடைகள் எழுதப்பட்டிருந்தன.

இருப்பினும் அனேகமான மாணவர்கள் இந்த வினாவுக்கு சரியான விடையினை எழுதி ஒதுக்ககப்பட்ட ஐந்து புள்ளிகளில் மூன்று புள்ளிகளுக்கு அதிகமாக பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கான விடைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**வினா இல. 04** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவின் பகுதி (A) கணக்காய்வாளர் வெளிவாரி உறுதிப்படுத்தல்களை பயன்படுத்தும் நான்கு சந்தர்ப்பங்களை கூறுமாறும்.். பகுதி (B) கணக்காய்வாளரால் வெளிவாரி உறுதிப்படுத்தல் கோரிக்கை தொடர்பில் அனுப்பிய கடிதத்திற்கான பதிலிறுத்தலின் நம்பகத்தன்மை பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியை இனங்காணவும் கேட்கப்பட்டது.

பகுதி (A) க்கு சில மாணவர்கள் சந்தர்ப்பங்களுக்குப் பதிலாக வங்கிக் கூற்றுக்கள், தொக்குச் சான்றுப் பத்திரம், காசுச் சான்றுப்பத்திரம் ஆகிய ஆவணங்களின் நிரலை எழுதியுள்ளனர். அனேக மாணவர்கள் பகுதி (b) க்கு விடை எழுதவில்லை. சில மாணவர் 'மூன்றாம் தரப்பினர் பதிலிறுக்க மறுக்கும்போது, வாடிக்கையாளர் மூன்றாம் தரப்பினருடன் தொடர்புகளை நிறுத்தியுள்ளபோதூ ஆகிய தொடர்பற்ற விடைகளை எழுதியுள்ளனர்.

இந்த வினாவுக்கான விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

## பிரிவு B

மூன்று(03) கட்டாய வினாக்கள்

**வினா இல. 05** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

பகுதி (A): நிலையான சொத்து உருப்படியொன்றினை உரிய நேரத்தில் மூலதனப்படுத்தாத போது, நிதிக்கூற்றுக்களில் அதன் தாக்கத்தினை விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

பகுதி (B): விடய அழுத்தப் பந்தியை (emphasis of matter paragraph) விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

பகுதி (C): கணக்காய்வாளர் அறிக்கையில் அறிமுகப் பந்தியில் குறிப்பிடப்படும் முக்கிய விடயங்கள் பற்றி பரீட்சிக்கப்பட்டது.

அனேக மாணவர்கள் நிதிக்கூற்றுக்களில் தாக்கத்தினை சரியாக இனங்கண்டு அந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளை பெற்றனர். எனினும் பகுதி (C) க்கான விடைகளில் அறிமுகப் பந்தியை சாராத சில விடயங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தன.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த விடைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்தன.

**வினா இல. 06** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினாவில் நடப்புக் கணக்காய்வுக் கோப்பு.். கம்பனி, அதன் தொழிற்துறை மற்றும் சூழல் பற்றி எவ்வாறு அறிந்துகொள்வது, நிதிக்கூற்றுக்களின் உறுதிப்பாடு ஆகியவை பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவு பரீட்சிக்கப்பட்டது.

இந்த வினா கடந்த காலங்களிலும் பரீட்சிக்கப்பட்ட மிகவும் பிரபல்யமான வினாவாக இருந்தபோதிலும் சில மாணவர்கள் பகுதி (A) க்கு சரியான விடையெழுத முடியாது உள்ளனர். சில மாணவர்கள் நிரந்தரக் கோப்பில் உள்ளடக்கவேண்டிய ஆவணங்களை குறிப்பிட்டனர். மேலும் வேறு சில மாணவர் கொள்வனவுப் பேரேடு, விற்பனைப் பேரேடு, காசேடு ஆகியவற்றின் விபரங்களை எழுதியிருந்தனர்.

அனேகமான மாணவர்கள் பகுதி (B) க்கு சரியான விடை எழுதியிருந்தனர்.

அனேக மாணவர் நிதிக்கூற்று உறுதிப்பாடு பற்றிய உரிய அறிவினை கொண்டிருக்காதது அவர்களின் விடைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. அதன் காரணமாக அவர்கள் உரிய விடைக்குப் பதிலாக ஏனைய கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிட்டிருந்தனர்.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த விடைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்தன.

**வினா இல. 07** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

**பகுதி A (a)** : அகக்கட்டுப்பாட்டு முறைமையின் இரு நோக்கங்களை கூறுமாறு கேட்கப்பட்டது.

**பகுதி A (b**) : COSO அகக்கட்டுப்பாட்டுச் சட்டகத்தின் இரு கூறுகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது.

**பகுதி B :** இது தருநிலை நடைமுறை வினாவாகும். தரப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் அகக்கட்டுப்பாட்டு பலவீனங்களை இனங்கண்டு, அந்த தாக்கங்களிலிருந்து விடுபட என்ன செய்யவேண்டுமென பரிந்துரை வழங்குமாறு கேட்கப்பட்டது.

கிட்டத்தட்ட எல்லா மாணவர்களும் அகக்கட்டுப்பாட்டு முறைமை நோக்கங்களை சரியாக குறிப்பிட்ட போதிலும், அனேக மாணவர்கள் COSO சட்டகம் பற்றிய கேள்விக்கு விடையளிக்கவில்லை.

அதிகளவு மாணவர்கள் **பகுதி B** க்கும் சரியாக விடையளித்திருந்தனர். இருப்பினும் ஒரு சில மாணவர்அந்நிய நாணயமாற்று இடர், தளம்பற்காப்பு ஒப்பந்தங்களை (hedging contracts) ஏற்படுத்துதல் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர். மேலும் சில மாணவர்கள் கேள்வியை நன்கு விளங்கிக் கொள்ளார்து, பலவீனங்களாக அந்நிய வாடிக்கையாளரின் நிலுவைகளை சேகரிப்பதற்கு அக்கறை செலுத்தாமை, உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள் ஆகியவற்றை குறிப்பிட்டிருந்தனர்..

இந்த வினாவுக்கான விடைகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன.

## <u>பிரிவு C</u>

இரண்டு (02) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 08** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இந்த வினா கோட்பாட்டுரீதியான மற்றும் நடைமுறைரீதியான இரு விடயங்களையும் உள்ளடக்கியது.

**பகுதி (A):** கணக்காய்வுச் சான்றுகளை பெறுவதற்கான கணக்காய்வு விதிமுறைகளின் வகைகள் பற்றிய அறிவினை பரீட்சிப்பதாகும். அனேக மாணவர்கள் இந்தப் பகுதிக்கு முழுப்புள்ளிகளை பெற்றுள்ளனர். எனினும், சில மாணவர்கள் ‘உரிமம் நடைமுறைப்படுத்தும் உரிய கட்டுப்பாடுகள் விளைதிறனாக இருக்கும்போது, அகத்தே பிறப்பாக்கும் கணக்காய்வுச் சான்றுகள் அதிக நம்பகத்தன்மை உடையவை.். கணக்காய்வாளரால் நேரடியாகப் பெறப்படும் கணக்காய்வுச் சான்றுகள் அதிக நம்பகத்தன்மையை கொண்டவைொ போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியுள்ளனர்.

**பகுதி (B) (a)** இங்கு, தொக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய பகுப்பாய்வு விதிமுறைகள் பற்றி பரீட்சிக்கப்பட்டது. ஒரு சில மாணவர்களே தொக்குப் புரள்வு விகிதம், தொக்கு வதிவுக் காலம் ஆகியவற்றின் கணிப்பீடுகள் பற்றி சரியாக குறிப்பிட்டிருந்தனர். அனேக மாணவர்கள் பௌதிக தொக்குக் கணக்கெடுப்பு, வெட்டுப் புள்ளிச் சோதனை, தொக்குப் பதிவேடுகளை செவ்வை பார்த்தல் போன்ற சம்பந்தம் இல்லாத விடைகளை எழுதியுள்ளனர்.

**பகுதி (B) (b)-** இந்த வினாவில் தரப்பட்ட 4 விடயங்களுக்கு இரு மேலதிக கணக்காய்வு விதிமுறைகளை பட்டியலிடுமாறு கேட்கப்பட்டது. இது ஒரு செயன்முறை அடிப்படையிலான வினாவாகும். விடைகளில் இருந்து அனேக மாணவர்கள் தரப்பட்ட நிலையினையும் வினாவையும் முறையாக விளங்கிக்கொள்ள முடியாமை தெரியவந்தது.

**பகுதி (B) (b) (1) -** இந்தப் பகுதியில் கடன்பட்டோர் மீதிகளை அறுதியீடு செய்வதற்கு தேசைவயான கணக்காய்வு விதிமுறைகள்பற்றி பரீட்சிக்கப்பட்டது. கணக்காய்வு விதிமுறைகளுக்குப் பதிலாக அனேக மாணவர்கள் 'கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை மேற்கொள்ளல், ஐயுறவுக் கடன் ஏற்பாட்டிற்கான போதுமை" போன்ற தவறான விடைகளை எழுதியுள்ளனர்.

**பகுதி (B) (b) (2) -** இந்தப் பகுதியில், சம்பளப்பட்டியற் தொகை மற்றும் சம்பளப் பேரேட்டுக் கணக்கினை அறுதியீடு செய்வதற்கு மேலதிக கணக்காய்வு விதிமுறைகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அனேக மாணவர்கள் இந்தப் பகுதிக்கு சரியாக விடையளித்திருந்தனர். எனினும் இந்த வினாவினை சரியாக விளங்கிக்கொள்ள முடியாத மாணவர்கள் 'சம்பளப் பட்டியலில் பொய்யான ஊழியர்களை உட்படுத்துதல், ஊழியருக்கு மிகையாக செலுத்துதல்" போன்ற காரணங்களை சம்பளப்பட்டியற் தொகைக்கும் சம்பளப் பேரேட்டுக் கணக்கு மீதிக்கும் இடையில் காணப்படும் வித்தியாசத்திற்கு காரணமாக எழுதியுள்ளனர்.

**பகுதி (B) (b) (3) -** இந்த வினா ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு தொடர்பில் அங்கீகரித்த கொள்வனவுக்கட்டளை கிடைக்காதபோது மேலதிக கணக்காய்வு விதிமுறைகள் பற்றியது. மாணவர் இந்த வினாவை சரியாக விளங்கிக்கொள்ளாது, 'கொள்வனவுக் கட்டளைகளின் தொடர் இலக்கத்தினை செவ்வை பார்த்தல், பொருட் பெறுவனவுக் குறிப்புடன் கொள்வனவுக் கட்டளைகளின் விபரங்களை சரிபார்த்தல் போன்ற தவறான விடைகளை எழுதியுள்ளனர். ஒரு சில மாணவர்கள் மாத்திரம் பணிப்பாளர் சபையின் அனுமதி போன்ற சரியான விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (B) (b) (4) -** இந்தப் பகுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரண உபகரணங்களை பௌதிக ரீதியில் கணக்கெடுக்காதபோது, தேவையான கணக்காய்வு விதிமுறைகளை இனங்காகுமாறு கேட்கப் பட்டது. சில மாணவர்கள் PPE உருப்படிகளின் பெறுமதிமதிப்பீடு, கொள்வனவு மற்றும் விற்பனைக்கான அங்கீகாரம், போன்ற தவறான விடைகளை எழுதியுள்ளனர்.

**பகுதி (C) -** இங்கு ஒரு மாதிரி வேலைத்தாள் தரப்பட்டு அதிலுள்ள குறைபாடுகளை இணங்காணுமாறு கேட்கப்பட்டது. அனேக மாணவர்கள் இதற்கு முழுப் புள்ளிகளை பெற்றுள்ளனர். சில மாணவர்கள் வேலைத்தாளின் அடக்கத்தை நன்கு வாசிக்காது தவறான விடைகளை எழுதியுள்ளனர். அத்தகைய தவறான விடைகள் வேலைத்தாளை தயாரித்தவரின் பெயர், தயாரிக்கப்பட்ட திகதி என்பன குறிப்பிடப் படவில்லை என்பதாகும். எனினும், இவை ஏற்கனவே வேலைத்தாளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த விடைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்தன.

**வினா இல. 09** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இந்த வினா கோட்பாட்டு மற்றும் நடைமுறை விடயங்களை அடக்கியது.

**பகுதி A (a)** - இந்தப் பகுதியில் ஒரு வெளிவாரிக் கணக்காய்வாளர் தமது நியமனத்தை ஏற்றுக்கொள்ள முன்னர் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

அனேகமான மாணவர்கள் குறிப்பான விடைகளை அல்லாது, பொதுவான விடைகளை தந்துள்ளனர். சில மாணவர்கள் 'கம்பனி மற்றும் தொழிற்துறை பற்றிய தகவல்கள், உறவுமுறைத் தரப்பினருடன் உடன்படிக்கை, கணக்காய்வு கட்டணம்பற்றிய உடன்படிக்கை, கம்பனி நியதிகளும் ஒழுங்குவிதிகளும்" போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர். ஒட்டுமொத்தமாக இந்த வினாவுக்கான விடைகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

**பகுதி A (b) -** இந்தப் பகுதியில் நிறைவற்ற ஈடுபடுத்தற் கடிதமொன்று தரப்பட்டு, அதில் தவறவிடப்பட்ட விடயங்களை இனங்காகுமாறு கேட்கப்பட்டது. கணிசமான மாணவர்கள் திருப்திகரமான விடைகள் எழுதியிருப்பினும், அனேகர் 'திகதி குறிப்பிடப்படாமை, ஏற்றுக்கொள்ளாமை, கையொப்பம், முகவரி மற்றும் அறிக்கைத் தொடர்பு பற்றி குறிப்பிடப்படாமை" ஆகிய தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி B (a) -** இந்தப் பகுதியில் உள்ளீட்டுத் தரவுகள் மீதான கட்டுப்பாடுகள் பற்றிய மாணவர்களின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. இங்கு பரீட்சகர் குறிப்பாக உள்ளீட்டு ரணத்துவம் மீதான கட்டுப்பாடுகள் பற்றி பரீட்சித்துள்ளார்.

அனேக பரீட்சார்த்திகள் கணனிமயப்படுத்திய முறைமையின் பொதுக் கட்டுப்பாடுகளை குறிப்பிட்டனர். அவர்களின் விடைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கின:

- கடவுச் சொற்களின் பயன்பாடு (Use of passwords)
- முறைமைக்கு வரையறுக்கப்பட்ட கையாள்கை (Restrict access to the system)
- மீளாய்வு (Review)
- ஒத்திசைவுச் சோதனை (Compliance test)
- வேலைப் பிரிப்பு (Division of work)
- CCTV கமராக்களை பொருத்துதல் போன்றவை.

இதன் காரணமாக ஒரு சில மாணவர் மாத்திரம் இந்தப் பகுதிக்கு முழுப்புள்ளிகளை பெற்றனர்.

**பகுதி B (b) -** இந்தப் பிரிவில் மாணவர்களிடம் உள்ளீடுகளின் செம்மை தொடர்பான கட்டுப்பாடுகளை தெரிவிக்குமாறு கேட்கப்பட்டது. அனேக மாணவர்கள் இப்பகுதிக்கு விடையெழுத முயற்சிக்கவில்லை.

மேலும், சில மாணவர் கேள்வியை தவறாக விளங்கிக்கொண்டு, கணனிமயப்படுத்தப்பட்ட சூழல்பற்றிய கேள்விக்கு விடையாக உற்பத்தி நிறுவனமொன்றின் உள்ளீட்டுப் பொருட்களின் செம்மை தொடர்பாக எழுதியுள்ளனர். அத்தகைய தொடர்பற்ற விடைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கின:

- உள்ளீடுகளின் பௌதிக அறுதியீடு
- அவதானிப்பதற்கு பொறுப்புவாய்ந்த நபர்களை நியமித்தல்
- பரீட்சிப்பு (Inspection)
- மீள மேற்கொள்ளல்
- விசாரணை (Inquiry)
- நம்பகரமான தகவல்களை பயன்படுத்தல்
- முறைமையை புத்தூட்டுதல் (System updates)
- புறச்சேமிப்புகளை பேணுதல் (Keeping a backups) ஆகியன.

**பகுதி (C) (a)** - இந்தப் பகுதியில் தொடர்ந்தியங்கும் அமைப்பு எடுகோள் பற்றி கணிசமான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய தொழிற்பாட்டுக் காட்டிகளை தருமாறு கேட்கப்பட்டது.

அனேகமான மாணவர்கள் இந்தப் பகுதிக்கு விடையெழுத எத்தனித்த போதிலும், கேள்வியை நன்கு வாசித்து பரீட்சகரின் எதிர்பார்ப்பினை முறையாக விளங்கிக்கொள்ள தவறிவிட்டனர். அதன்காரணமாக அவர்கள் கீழே தரப்பட்டுள்ளவை போன்ற நிதிசார் மற்றும் ஏனைய பொதுவான காட்டிகளை விடையாகத் தந்துள்ளனர்:

- காசுப்பாய்வு பற்றிய விடயங்கள்
- விற்பனையில் வீழ்ச்சி
- பரிப்பில் அதிகரிப்பு
- பாதகமான விகிதக் காட்டிகள்
- பலவீனமான அகக் கட்டுப்பாட்டு முறைமைகள்
- தொடர்ச்சியான நட்டங்கள்
- செலவுகளை செலுத்துவதற்கு கடன் பெறுதல்

**பகுதி (C) (b)**

இந்தப் பகுதியில் தொடர்ந்தியங்கும் தாபன மீளாய்வினை மேற்கொள்ளும்போது கணக்காய்வாளர் பிரயோகிக்கக்கூடிய கணக்காய்வு விதிமுறைகளை கூறுமாறு கேட்கப்பட்டது. அனேகமான மாணவர்கள் இந்தப் பகுதிக்கு திருப்திகரமாக விடையளித்துள்ளனர். எனினும், சில மாணவர்கள் எதுவிதத்திலும் தொடர்பற்ற விடைகளை தந்துள்ளனர் அத்தகைய விடைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கின:

- செயற்திட்டங்களின் மீள்கணிப்பீடு
- மீள் செயற்பாடு (Re performance)
- வலுவளிப்பு விதிமுறைகள் (Substantive procedures)
- கட்டுப்பாட்டுச் சோதனைகள் (Test of Controls)
- சோதனை (Inspection)
- ஆகக் கட்டுப்பாடுகளின் மீளாய்வு போன்றவை

இந்த வினாவுக்கான விடைகள் ஒட்டுமொத்தமாக சராசரி மட்டத்திற்கு குறைவாகக் காணப்பட்டது.

---

**<u>தகுதி மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

(1) முழுப் பாடவிதானத்தையும் நன்கு கற்றல்.

(2) பரீட்சார்த்திகள் வினாக்களை கவனமாக நன்கு வாசித்து நேரடியான, செம்மையான விடைகள் தேவைப்படுமிடத்து, தேவையற்ற விளக்கங்களையும் விபரங்களையும் தவிர்த்தல் வேண்டும்.

(3) கணக்காய்வு தொடர்பாக பாடப்புத்தகங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய ஏடுகளில் வரும் விடயங்களை கற்று விளங்கிக்கொள்ளுங்கள்.

(4) வினா வினைச்சொற்கள் நிரல் அவற்றின் பொருள் வரையறைகளுடன் வினாத்தாளில் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் வினா வினைச்சொல்லை கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் தரப்பட்ட வினா வினைச்சொல்லின் பொருள்வரையறை அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(5) விடையெழுதும்போது, கோட்பாடுகளை நிறுவனரீதியாக தொடர்புபடுத்தி அவசியமான இடத்து உதாரணங்களை குறிப்பிடுதல் வேண்டும்.

(6) விடைகளை தெளிவாக எழுதுவதுடன், உரிய முறையில் இலக்கமிடப்பட வேண்டும்.

(7) வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கடைப்பிக்கவும்.

(8) உமது அறிவினை விருத்திசெய்ய கடந்தகால வினாக்களையும் விடைகளையும் நன்கு பாடம் செய்யவும்.

(9) கால முகாமைத்துவம் முக்கியமானது.

(10) விடைத்தாள்களை சமர்ப்பிக்கு முன்னர் விடைகள் ஒழுங்காக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதனை மீண்டும் சரிபார்க்கவும்.

(11) நன்கு தயார்ப்படுத்திக்கொண்டும், மிகுந்த நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு தோற்றவும்.

- * * * -